**கருக்கம்**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை – விளையாட்டுகள் – தமிழ்நாட்டில் உள்ளஅனைத்து கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் "அம்மா இளைஞர் விளையாட்டு திட்டம்" செயல்படுத்துதல் – மானியம் ஒப்பளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (எஸ்2) துறை**

**அரசாணை (நிலை) எண்.36**

**நாள்: 22.10.2019**
**விகாரி – ஐப்பசி – 5**
**திருவள்ளுவர் ஆண்டு 2050**

**படிக்கவும்:**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலரின் கடித எண். 10409 /இஎம்2/2019, நாள் 14.08.2019.

*****

**ஆணை:–**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் 09.07.2019 அன்று கிராமங்களில் உள்ள இளைஞர்களின் ஆரோக்கியம் மற்றும் மன வளத்தை மேம்படுத்தவும், கூட்டு மனப்பான்மையை உருவாக்கவும், இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கவும், அதை வெளிக்கொணரவும் 2019–2020ம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து 12,524 கிராம ஊராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் ரூ.64,35,00,000/– மதிப்பீட்டில் "அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்" என்ற திட்டம் செயல்படுத்தப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

2. இவ்வறிப்பிற்கிணங்க, பார்வையில் காணும் கடிதத்தில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர், "அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்" செயல்படுத்துதல் தொடர்பான திட்ட விளக்கம் மற்றும் தேவைப்படும் செலவினத் தொகை விவரங்களை தெரிவித்துள்ளதோடு "அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டத்தை" தமிழ்நாட்டின் 12,524 கிராம ஊராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் சிறப்புற செயல்படுத்தும் பொருட்டு கீழ்க்கண்ட இனங்களுக்கு அனுமதி வழங்கி உரிய ஆணை மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்குமாறு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் அரசினை கோரியுள்ளார்.

i. "அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டத்தை" 12,524 கிராம ஊராட்சிகளிலும் 528 பேரூராட்சிகளிலும் செயல்படுத்துவதற்கு ஆணை.

ii. திட்ட விளக்கத்தில் கூறியவாறு மாவட்ட அளவிலான விளையாட்டு ஆலோசனை குழு மற்றும் ஊராட்சி, பேரூராட்சி விளையாட்டு ஆலோசனைக் குழு அமைத்து

"அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டத்தை" அனைத்து ஊராட்சி / பேரூராட்சிகளிலும் செயல்படுத்துவதற்கான ஆணை.

iii. கபடி, வாலிபால் மற்றும் கிரிக்கெட் (அல்லது) கால்பந்து விளையாட்டுகளில் ஊராட்சி ஒன்றிய அளவில், மாவட்ட அளவில், மாநில அளவில் போட்டிகளை நடத்துதல், ஆடுகளங்கள் அமைத்தல், விளையாட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்குதல், திறந்தவெளி உடற்பயிற்சி மையம் அமைத்தல் ஆகிய இனங்களின் கீழ் திட்ட விளக்கத்தின்படி செயலாற்ற 2019–2020ம் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு ரூ.76,23,09,300/– (ரூபாய் எழுபத்தாறு கோடியே இருபத்து மூன்று இலட்சத்து ஒன்பதாயிரத்து முந்நூறு மட்டும்)க்கான நிதி ஒதுக்கீடு ஆணை.

iv. மேலும் இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 12,524 கிராம ஊராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்கி வழங்கிடவும் மற்றும் போட்டிகள் நடத்திடவும் தலா ரூ.25,000/–, உடற்கல்வி இயக்குநர் / ஆசிரியர் (அல்லது) வகுப்பு ஆசிரியர் மதிப்பூதியம் தலா ரூ.4000/– வழங்கிடவும், திட்டம் குறித்த விளம்பரங்கள் செய்ய ரூ.1,00,00,000./ என்ற அடிப்படையில் தொடர் செலவினமாகத் தேவைப்படும் மொத்தத் தொகை ரூ.38,85,08,000/– (ரூபாய் முப்பத்தெட்டு கோடியே எண்பத்தைந்து இலட்சத்து எட்டாயிரம் மட்டும்) க்கான நிதி ஒதுக்கீடு ஆணை.

v. "அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டத்தின்" கீழ் ஆடுகளங்கள் அமைக்கும் பணிகளை ஊராட்சிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மற்றும் பேரூராட்சிகளில் பேரூராட்சிகள் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு உரிய ஆணை.

இத்திட்ட செலவின சுருக்கத்தை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

| வ. எண். | விவரங்கள் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | கபடி விளையாட்டுக்கான உபகரணங்கள் வழங்குதல் மற்றும் போட்டிகள் நடத்துதல் | 3,85,56,200 |
| 2. | வாலிபால் விளையாட்டுக்கான உபகரணங்கள் வழங்குதல் மற்றும் போட்டிகள் நடத்துதல் | 18,34,12,100 |
| 3. | கிரிக்கெட் அல்லது பூப்பந்து அல்லது இதர விளையாட்டுகள் இவற்றில் ஏதேனும் ஒரு விளையாட்டுக்கான உபகரணங்கள் வழங்குதல் மற்றும் போட்டிகள் நடத்துதல் | 32,15,09,000 |
| 4. | திறந்த வெளி உடற்பயிற்சி மையம் | 15,66,24,000 |
| 5 | திட்டம் குறித்த விளம்பரங்கள் செலவினம் | 1,00,00,000 |

| | | |
|---|---|---|
| 6. | உடற்கல்வி இயக்குநர் / ஆசிரியர் (அல்லது) வகுப்பு ஆசிரியர் மதிப்பூதியம் | 5,22,08,000 |
| | மொத்தம் | 76,23,09,300 |

3. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து "அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டத்தை" 12,524 கிராம ஊராட்சிகளிலும் 528 பேரூராட்சிகளிலும் செயல்படுத்தும் பொருட்டு இணைப்பில் உள்ளவாறு அனைத்து கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் இரு பாலருக்கும் தனித்தனியாக "அம்மா இளைஞர் விளையாட்டுக் குழு" அமைக்கவும், இத்திட்டத்தினை செயல்படுத்த மாவட்ட அளவிலான விளையாட்டு ஆலோசனை குழு மற்றும் ஊராட்சி, பேரூராட்சி விளையாட்டு ஆலோசனைக் குழு அமைக்கவும், கபடி, வாலிபால் மற்றும் கிரிக்கெட் (அல்லது) பூப்பந்து (அல்லது) இதர விளையாட்டுகள், இவற்றில் ஏதேனும் மூன்று விளையாட்டுகளுக்கு ஊராட்சி ஒன்றிய அளவில், மாவட்ட அளவில், மாநில அளவில் போட்டிகளை நடத்தவும் மற்றும் மேற்காண் விளையாட்டுகளுக்கான ஆடுகளங்கள் அமைக்கவும், விளையாட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்கவும், திறந்தவெளி உடற்பயிற்சி மையம் அமைக்கவும் அரசு ஒப்புதல் வழங்குகிறது. மேலும், 2019–2020–ஆம் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு ரூ.76,23,09,300/– (ரூபாய் எழுபத்தாறு கோடியே இருபத்து மூன்று இலட்சத்து ஒன்பதாயிரத்து முந்நூறு மட்டும்) க்கான நிதி ஒதுக்கீடு செய்தும் ஆணையிடுகிறது.

4. "அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டத்தின்" கீழ் ஆடுகளங்கள் அமைக்கும் பணிகளை, ஊராட்சிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழும், பேரூராட்சிகளில், பேரூராட்சிகளின் பொது நிதியிலிருந்தும் மற்றும் பொது நிதி வசதியில்லாத பேரூராட்சிகளில் இத்திட்டத்தின் சேமிப்பு நிதியிலிருந்தும் மேற்கொள்ள வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2204 – 00 விளையாட்டுகளும் இளைஞர் நலப் பணிகளும் – 104 போட்டி விளையாட்டுகளும், விளையாட்டுகளும் – மாநிலச் செலவினங்கள் – KR விளையாட்டுப் போட்டிகளை நடத்திட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு மானியங்கள் – 309 உதவித்தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"
(IFHRMS த.தொ.கு.2204 00 104 KR 30903)
Old (DPC: 2204–00–104–KR-0935)

6. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், 2019–2020 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அதனை எதிர்நோக்கி, சென்னை–9, தலைமைச் செயலகம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் அரசு சார்புச் செயலாளர், மேலே பத்தி–3–ல் ஒப்பளிக்கப்பட்ட

செலவினத்தை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் (தன் வைப்பு நிதிக் கணக்கு எண்.6184513932) என்ற பெயரில் காசோலையாகப் பெற்று, அதனை சென்னை–84, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலருக்கு வழங்கிட வேண்டும். இச்செலவினம் 2019–20ஆம் ஆண்டு துணை மானிய கோரிக்கையில் சேர்க்கப்பட்டு ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி சட்டமன்ற பேரவையின் கவனத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும். மேலே ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2019–2020ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கும் மற்றும் 2019–20ஆம் ஆண்டு துணை மானிய கோரிக்கையில் சேர்ப்பதற்கும் தனிதனியான கருத்துருவினை உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொ.I/கல்வி–I)த் துறைக்கு அனுப்புமாறு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய முதன்மைச் செயலாளர் / உறுப்பினர் செயலர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய முதன்மைச் செயலாளர் / உறுப்பினர் செயலர் காசோலையைப் பெற்ற பின்னர், அதனை வங்கியில் பராமரிக்கப்படும் தன் வைப்பு நிதிக் கணக்கில், முப்படிவ செலுத்துகைச் சீட்டில் முறையாக கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பைக் குறிப்பிட்டு, வைப்பீடு செய்ய வேண்டும்.

> "K வைப்புகள் மற்றும் முன்பணங்கள் (B) வட்டிபெறா வைப்பீடுகள் - 8443 00 உரிமையியல் வைப்பீடுகள் - 800 ஏனைய வைப்புகள் - CH - தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வைப்புகள்."
> 801-வரவுகள் 02 வட்டியில்லா வரவுகள்
> (த.தொ.கு 8443 00 800 CH 000D) (வரவுகள்)
> (IFHRMS த.தொ.கு 8443 00 800 CH 80102)

8. மேலே குறிப்பிடப்பட்டுள்ள செலவினம் குறித்த விவரங்களுடன் பயன்பாட்டுச் சான்றிதழையும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் உரிய காலத்தில் அரசுக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார். மேலும், பல்வேறு செலவினங்களுக்கான விவரங்கள் உரிய பதிவேடுகளில் பதிந்து முறையாக பராமரிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.10/DS(AR)/2019, நாள் 21.10.2019–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது மற்றும் இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேட்டு எண்.1798 (ஆயிரத்து எழுநூற்று தொண்ணூற்று எட்டு)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

தீரஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

முதன்மைச் செயலாளர் / உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை–84.
மாநிலக் கணக்காயர், (CAS) சென்னை– 9.
மாநிலக் கணக்காயர், சென்னை– 18.

மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை– 18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–9.
அரசு துணைச் செயலாளர்/அரசு சார்புச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சென்னை–9.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் அலுவலகம்,
மாண்புமிகு அமைச்சர் (பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம் (ம) ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (கல்வி– I)த் துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலரின் தனிச் செயலர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சென்னை– 9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
அனைத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர்கள் / முதன்மைச் செயலாளர்கள் / செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை – 9.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
தேசிய தகவல் மையம், தலைமைச் செயலகம், சென்னை – 9.
அனைத்து தலைமைச் செயலக துறைகள், சென்னை – 9.
தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு சங்கங்கள் (தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் வழியாக)
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

22.10.19

பிரிவு அலுவலர்

## அரசாணை (நிலை) எண். 36, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு (எஸ்2) துறை, நாள்22.10.2019-க்கான இணைப்பு

**திட்ட விளக்கம்:**

நோக்கம் :

1. இளைஞர்களிடையே தலைமைப் பண்பினை வளர்த்தல்.
2. கிராம இளைஞர்களிடம் கூட்டு மனப்பான்மையினை உருவாக்குதல்.
3. கிராமங்களில் உள்ள திறமையான இளைஞர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு முறையான பயிற்சி கொடுத்து அவர்களை உயர்மட்ட போட்டிகளில் சாதனை படைக்க வைத்தல்.

**திட்ட செயல்பாடு:**

- மாவட்ட அளவிலான விளையாட்டு ஆலோசனைக் குழு மற்றும் ஊராட்சி / பேரூராட்சி விளையாட்டு ஆலோசனைக் குழு அமைத்தல்.
- முதற்கட்ட நடவடிக்கையாக ஒவ்வொரு கிராம ஊராட்சி மற்றும் பேரூராட்சியிலும் "அம்மா கிராம இளைஞர் விளையாட்டுக் குழு" என்ற பெயரில் விளையாட்டுக் குழு இருபாலருக்கும் அமைக்கப்படும்.
- ஒவ்வொரு ஊராட்சியிலும் கபடி, வாலிபால் மற்றும் கிரிக்கெட் (அல்லது) பூப்பந்து (அல்லது) இதர விளையாட்டுகள் இவற்றில் ஏதேனும் மூன்று விளையாட்டுகளுக்கு ஆடுகளம் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி மையம் ஒன்று அமைத்துத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் ஆண்டு முழுவதும் வழங்கப்படும்.
- அந்தந்த கிராம ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளில் வசிக்கும் 15 வயது முதல் 35 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் "அம்மா இளைஞர் விளையாட்டுக் குழு" வில் உறுப்பினர்களாக பதிவு செய்து கொண்டு தினசரி விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபடலாம். குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையில் உச்ச வரம்பு இல்லை. அந்தந்த ஊராட்சி / பேரூராட்சி குழுவில் சம்மந்தப்பட்ட ஊராட்சி / பேரூராட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே உறுப்பினர்களாக இருக்க முடியும்.
- இத்திட்டத்தின் மூலம் இளைஞர்களுக்குக் போதிய பயிற்சி அளித்து, தேர்ந்தெடுக்கப்பட்ட ஆடவர் மற்றும் மகளிர் அணிகளுக்கு ஊராட்சி ஒன்றிய, மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு ஒவ்வொரு நிலையிலும் பரிசுகள் வழங்கப்படும். ஊராட்சி ஒன்றிய அளவில் வெற்றி பெற்ற அணிகள் மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளுக்கும், மாவட்ட அளவில் வெற்றி பெறும் அணிகள் மாநில அளவில் நடைபெறும் போட்டிகளிலும் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
- மேற்கூறிய போட்டிகளில் கண்டறியப்படும் திறமை மிக்க விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களின் கீழ் சேர்த்து பயனடைய வழி வகை செய்யப்படும்.

இத்திட்டம் இரண்டு நிலைகளில் ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

அ) மாவட்ட அளவிலான விளையாட்டு ஆலோசனைக்குழு

ஆ) (a) ஊராட்சி விளையாட்டு ஆலோசனைக் குழு

(b) பேரூராட்சி விளையாட்டு ஆலோசனைக் குழு

மேற்காண் ஆலோசனைக் குழுக்களின் உறுப்பினர், பணிகள் மற்றும் பொறுப்புகள் மற்றும் ஊராட்சி செயலர் / செயல் அலுவலர் (பேரூராட்சி) மேற்கொள்ள வேண்டிய பணிகள் மற்றும் பொறுப்புகள் பின்வருமாறு:

**(அ) மாவட்ட அளவிலான விளையாட்டு ஆலோசனைக் குழு:**

மாவட்ட அளவிலான விளையாட்டு ஆலோசனைக் குழு மாவட்ட ஆட்சியரின் தலைமையில் கீழ்க்கண்ட அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் | –துணை தலைவர் |
| 2. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | – உறுப்பினர் |
| 3. | மாவட்ட வருவாய் அலுவலர் | – உறுப்பினர் |
| 4. | மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் | – உறுப்பினர் |
| 5. | வட்டாட்சியர்கள் | – உறுப்பினர் |
| 6. | துணை இயக்குநர் (சுகாதாரம்) | – உறுப்பினர் |
| 7. | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) | – உறுப்பினர் |
| 8. | உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) | – உறுப்பினர் |
| 9. | முதன்மைக் கல்வி அலுவலர் | – உறுப்பினர் |
| 10. | மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் | – உறுப்பினர் |
| 11. | வட்டார வளர்ச்சி அலுவலர்கள் | – உறுப்பினர் |
| 12. | சம்பந்தப்பட்ட விளையாட்டுகளின் மாவட்ட சங்கச் செயலர்கள் | – உறுப்பினர் |
| 13. | மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் | – கூட்டுநர் |

**மாவட்ட அளவிலான விளையாட்டு ஆலோசனைக்குழுவின் பணிகள் மற்றும் பொறுப்புகள் :**

i. மாவட்ட வருவாய் அலுவலர், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி இயக்குநர் (ஊராட்சிகள் / பேரூராட்சிகள்), முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் ஆகியோர் மூலமாக ஊராட்சிகளில் மற்றும் பேரூராட்சிகளில் விளையாட்டுகளுக்கான ஆடுகளங்கள் மற்றும் உடற்பயிற்சி

மையம் அமைப்பதற்கான இடங்கள் மற்றும் குழுக்கள் செயல்படுவதற்கும் விளையாட்டு உபகரணங்கள் வைப்பதற்கான இடங்கள் கண்டறியப்படும்.

ii. இத்திட்டம் செயல்படுத்தத் தேவைப்படும் நிலம் கண்டறியப்பட்ட பின்னர் தேவைப்படும் பட்சத்தில் வட்டாட்சியர் அவர்களை மாவட்ட அளவிலான விளையாட்டு ஆலோசனைக் கூட்டத்திற்கு அழைத்து ஆலோசனை பெறலாம்.

iii. மகாத்மாகாந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் ஊராட்சிகளிலும், பேரூராட்சிகள் பொது நிதியிலிருந்து பேரூராட்சிகளிலும் விளையாட்டுகளுக்கான ஆடுகளங்கள் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி மையத்திற்கான இடம் ஊரக வளர்ச்சி முகமை மூலமாக அமைத்து பராமரிக்கப்படும்.

iv. இக்குழுவின் ஒப்புதலுடன் விளையாட்டு/ உடற்பயிற்சி உபகரணங்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர்கள் மூலமாக ஆண்டு முழுவதும் வழங்கப்படும்.

v. போட்டிகள் நடைபெறும் சமயங்களில் எவ்வித அசம்பாவிதமும் ஏற்படாமல் போதிய பாதுகாப்பு வழங்குவதை மாவட்டக் காவல்துறை உறுதி செய்யும்.

vi. போட்டிகளின் போது ஏற்படும் எதிர்பாராத விபத்துக்களை எதிர்கொள்ளும் வகையில் மற்றும் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்குத் தேவையான முதலுதவி மற்றும் மருத்துவ வசதி அளிப்பதை மாவட்ட சுகாதார அலுவலகம் உறுதி செய்யும்.

vii. இக்குழு, விளையாட்டுப் போட்டிகளின் போது திறமையான இளைஞர்களைக் கண்டறிந்து தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களின் கீழ் சேர்ந்து பயனடைய பரிந்துரைக்கும்.

viii. மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் இத்திட்டம் குறித்த விபரங்கள் மற்றும் போட்டிகள் தொடர்பான விளம்பரங்களை ஊடகங்கள் வாயிலாக மக்களிடத்து எடுத்துச் செல்வார்.

ix. இக்குழு ஊராட்சி, பேரூராட்சி விளையாட்டு ஆலோசனைக்குழுவின் மூலமாக ஊராட்சிகளில் அம்மா இளைஞர் விளையாட்டுக் குழு அமைக்க உரிய வழிகாட்டுதல் வழங்கும்.

x. மேற்கூறிய நடவடிக்கைகளைக் கண்காணிக்க துணை ஆட்சியர் நிலையில் மாவட்ட அலுவலர்கள் நியமனம் செய்யப்படுவர்.

xi. மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர்கள், உதவிக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் ஆகியோர் கொண்ட குழு, அனைத்து ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு உடற்கல்வி இயக்குநர் / ஆசிரியர் (அல்லது) வகுப்பு ஆசிரியர்களை பரிந்துரை செய்யும்.

xii. ஒவ்வொரு காலாண்டுக்கும் மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளில் உள்ள அம்மா இளைஞர் விளையாட்டு குழுவிற்கு தேவையான விளையாட்டு பந்துகளை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அனுமதியுடன் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் வழங்குவார்.

(ஆ) (a)ஊராட்சி விளையாட்டு ஆலோசனைக் குழு:

ஊராட்சி விளையாட்டு ஆலோசனைக் குழு வட்டார வளர்ச்சி அலுவலர்களின் தலைமையில் கீழ்க்கண்ட அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்படும்.

1. உதவி காவல் ஆய்வாளர்
2. அரசு பள்ளியின் தலைமை ஆசிரியர்
3. மருத்துவர், ஆரம்ப சுகாதார மையம்
4. தலைசிறந்த விளையாட்டு வீரர் / வீராங்கனை
5. கிராம நிர்வாக அலுவலர் (VAO)
6. ஊராட்சி செயலர் (கூட்டுநர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்)

உடற்கல்வி இயக்குநர் / ஆசிரியர் (அல்லது) வகுப்பு ஆசிரியரின் பரிந்துரைப்படி அந்தந்த கிராம ஊராட்சியிலுள்ள தலை சிறந்த விளையாட்டு வீரர் / வீராங்கனையை ஊராட்சி விளையாட்டு ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக இக்குழு நியமிக்கும். இந்த வீரர் / வீராங்கனைகளை ஒவ்வொரு ஆண்டும் குழு உறுப்பினராகப் பணி நீட்டிப்பு செய்யவோ / மாற்றவோ மேற்படி குழுவுக்கு முழு அதிகாரம் உண்டு. மேற்காணும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டு அணிகளில் இடம்பெறக் கூடாது.

(b) பேரூராட்சி விளையாட்டு ஆலோசனைக் குழு:

பேரூராட்சி விளையாட்டு ஆலோசனைக் குழு உதவி இயக்குநர், (பேரூராட்சிகள்) அவர்களின் தலைமையில் கீழ்க்கண்ட அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்படும்.

1. உதவி காவல் ஆய்வாளர்
2. அரசு பள்ளியின் தலைமை ஆசிரியர்
3. மருத்துவர், ஆரம்ப சுகாதார மையம்
4. தலைசிறந்த விளையாட்டு வீரர் / வீராங்கனை
5. கிராம நிர்வாக அலுவலர் (VAO)
6. செயல் அலுவலர், பேரூராட்சி (கூட்டுநர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்)

உடற்கல்வி இயக்குநர் / ஆசிரியர் (அல்லது) வகுப்பு ஆசிரியரின் பரிந்துரைப்படி அந்தந்த பேரூராட்சியிலுள்ள தலை சிறந்த விளையாட்டு வீரர் / வீராங்கனையை பேரூராட்சி விளையாட்டு ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக இக்குழு நியமிக்கும். இந்த வீரர் / வீராங்கனைகளை ஒவ்வொரு ஆண்டும் குழு உறுப்பினராகப் பணி நீட்டிப்பு செய்யவோ / மாற்றவோ மேற்படி குழுவுக்கு முழு அதிகாரம் உண்டு. மேற்காணும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டு அணிகளில் இடம்பெறக் கூடாது.

ஊராட்சி / பேரூராட்சி விளையாட்டு ஆலோசனை குழுவின் பணிகள் மற்றும் பொறுப்புகள் :

i) அந்தந்த ஊராட்சி / பேரூராட்சியில் உள்ள 15 முதல் 35 வயதிற்குட்பட்ட இளைஞர்களைக் கொண்டு “அம்மா இளைஞர் விளையாட்டு குழு” இருபாலருக்கும் அமைத்தல்.

ii) ஒவ்வொரு ஊராட்சி / பேரூராட்சிக்கும் கபடி, வாலிபால், கிரிக்கெட் அல்லது (அல்லது) பூப்பந்து (அல்லது) இதர விளையாட்டுகள், இவற்றில் ஏதேனும் மூன்று விளையாட்டுகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டுகளுக்கு ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் அம்மா இளைஞர் குழுவின் விளையாட்டு குழுவின் உறுப்பினர்களைக் கொண்டு தேர்வு செய்யப்பட வேண்டும்.

iii) அந்தந்த விளையாட்டுக்கான அணி மேலாளர்களை இக்குழு தெரிவு செய்து விபரங்களை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலருக்குத் தெரியப்படுத்தும்.

iv) சம்மந்தப்பட்ட உடற்கல்வி இயக்குநர் / ஆசிரியர் (அல்லது) வகுப்பு ஆசிரியர் அவர்கள் விளையாட்டுப் பயிற்சியளித்தல், பயிற்சிக்கு மைதானத்தை தயார் செய்தல், போட்டிகளுக்கு அணிகளை ஆயத்தம் செய்தல், போட்டிகளில் கலந்து கொள்ளத் தேவையான முன்னேற்பாடுகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளை மேற்கொள்வார். இவரது பணிக்கான மதிப்பூதியம் காலாண்டு ஒன்றிற்கு ரூ.1000/– வீதம் 4 காலாண்டுகளுக்கு மொத்தம் ரூ.4,000/– மாவட்ட விளையாட்டு (ம) இளைஞர் நலன் அலுவலர் மூலமாக காசோலையாக வழங்கப்படும்.

v) பயிற்சி / போட்டிகளின் போது ஏற்படும் எதிர்பாராத விபத்துக்களை எதிர்கொள்ளும் வகையில் மற்றும் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்குத் தேவையான முதலுதவி மற்றும் மருத்துவ வசதி அளிப்பதை ஆரம்ப சுகாதார மையம் உறுதி செய்யும்.

vi) பயிற்சி / போட்டிகள் நடைபெறும் சமயங்களில் எவ்வித அசம்பாவிதமும் ஏற்படாமல் போதிய பாதுகாப்பு வழங்குவதை காவல்துறை உறுதி செய்யும்.

ஊராட்சி செயலர்/ செயல் அலுவலர் (பேரூராட்சி) மேற்கொள்ள வேண்டிய பணிகள் மற்றும் பொறுப்புகள்:

i. ஊரக வளர்ச்சி முகமை மூலமாக அமைக்கப்பட்ட விளையாட்டு ஆடுகளங்களைப் பயிற்சிக்குத் தயார் செய்தல்.

ii. மாவட்ட விளையாட்டு அலுவலரிடமிருந்து பெறப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்களை இருப்புப் பதிவேட்டில் பதித்தல்

iii. தேர்ந்தெடுக்கப்பட்ட அணி வீரர், வீராங்கனைகளின் வயதுச் சான்றிதழ், ஆதார் அட்டை, குடும்ப அட்டை மற்றும் இருப்பிடச் சான்றிதழ் விவரங்களை சேகரித்தல்

iv. தேர்ந்தெடுக்கப்பட்ட அணியினர், அணி மேலாளர் மற்றும் குழுவின் கூட்டுநரான ஊராட்சி செயலர் / செயல் அலுவலர் (பேரூராட்சி) ஆகியோர் A4 அளவிலான புகைப்படம் எடுத்து பெயர்ப் பட்டியலுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட அணி வீரர், வீராங்கனைகளின் வயதுச் சான்றிதழ், ஆதார் அட்டை / குடும்ப அட்டை / இருப்பிடச் சான்றிதழ் ஆகிய விவரங்களுடன் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களிடம் பதிவு செய்ய வேண்டும்.

v. ஊராட்சி ஒன்றிய அளவிலான (கிராம ஊராட்சி/ பேரூராட்சிகளுக்கிடையேயான) போட்டிகளுக்குப் பயிற்சியளித்தல்

vi. போட்டிகளுக்கு அழைத்துச் சென்று பங்குபெறச் செய்தல்

vii. ஊராட்சி ஒன்றிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற அணியினருக்கு அடுத்த உயர் நிலையிலான போட்டிகளில் பங்குபெற பயிற்சியளித்தல்

தீரஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

22.10.19

பிரிவு அலுவலர்